# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 24/2024

நாள்: 15.06.2026

வா.சா. 2 – குருநாதன்

2026–ம் ஆண்டு ஜூன் 15–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ராசு என்பவர் எனது அப்பா என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி எனது சகோதரர். இருவருமே ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றார்கள் என்றால் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெறாமலயே இறந்துவிட்டார்கள். 1ஆம் பிரதிவாதி எனது தந்தைக்கு என்ன உறவு என்றால் அவரது அண்ணன் மகன் ஆவார். கிருஷ்ணமூர்த்தி ராமுவுக்கு என்ன உறவு முறை பெரியப்பா மகன் ஆவார். ராமு, கிருஷ்ணமூர்த்தி, ராசு ஆகியோரிடையே முன்விரோதம் ஏதும் இருந்ததா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் ராமு எதிர் கட்சி செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த எதிர் கட்சியில் என்னென்ன விரங்கள் சொல்லியுள்ளார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் உள்ள விவரங்கள் உண்மையா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் அவர் எதிர்உரையில் கூறியுள்ள விவரங்களை மறுத்து சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவும், கிருஷணமூர்த்தி ராமுவுக்கு ஒரு ஆதரவு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கையெழுத்து ராமு மற்றும் கிருஷ்ணமூர்த்தி கையெழுத்தா என்றால் இல்லை. 02.01.1990 ல் நான் மைனர் என்றால் சரிதான். எனது தந்தை ராசுவும், கிருஷ்ணமூர்த்தியும் ராமுவுக்கு சுவாதீன அக்ரிமெண்ட் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு

எதுவும் எழுதிக்கொடுக்கப்படவில்லை. அந்த ஆவணத்தில் ராமு கேட்கும் போது தாவா சொத்தை பொறுத்து ஆவணம் ஏற்படுத்தி பதவு செய்து தருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதி 36 வருடமாக எனது அப்பாவிடமிருந்தும், அண்ணணிடமிருந்து பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்த நத்தமா என்றால் சரிதான். நத்தம் இடத்தை அனுபவித்து வருபவர்களுக்கு பொதுவாக பட்டா வழங்கப்படும் என்றால் சரியல்ல. இரயத்துவாரி பட்டா வழங்கப்படாது. அது பிரதிவாதிகளுக்கு தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது. தவா சொத் முழுவதுமே 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றாலும், அந்த சொத்தில் அத்து மீறி நான் பிரவேசிக்க இயலாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள விளம்புகை மற்றும் சுவாதீனப்பரிகாரம் எனக்கு கிடைகக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு காலவதி தோஷத்தால் பாதிக்கப்ப்ட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாவாவிற்கான உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும், பிரதிவாதி கோரியுள்ள எதிர்க்கட்டு கோரிக்கை அவருக்கு கிடைக்கக்கூடியது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/sd/xxxx(R. Karthikeyan)
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.